## செய்தி வெளியீடு எண்: 29 நாள்: 16.06.2024

**மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், ஜம்புத்தீவு பிரகடனம் நினைவேந்தலுக்கும், அதிகம் அறியப்படாத தேசிய சுதந்திர வீரர்கள் பற்றிய சிறப்பு ஆராய்ச்சித் திட்டங்களின் ஆராய்ச்சியாளர்களுக்குப் பாராட்டு விழாவுக்கும் இன்று (16.06.2024) தலைமை தாங்கினார்.**

ஜம்புத்தீவு பிரகடனம் என்ற காலனி ஆதிக்கத்தில் இருந்து பாரதத்தை விடுவிக்கும் ஒரு மூலோபாய மற்றும் தொலைநோக்கு ஆவணம் இதே நாளில் 1801 ஜூன் 16-ம் நாளன்று தமிழ்நாட்டின் மாபெரும் போர்ப்படை தலைவர்களான மருது சகோதரர்களால் அறிவிக்கப்பட்டதை தமிழ்நாடு ஆளுநர் மாளிகை கொண்டாடியது. வாழும் சுதந்திர போராட்ட தியாகிகள் சிலர் மற்றும் மருது சகோதரர்களின் வழித்தோன்றல்களும் கௌரவிக்கப்பட்டனர். தமிழ்நாட்டின் சுமார் 100 சுதந்திர போராட்ட வீரர்களின் வாழ்க்கையையும், பணிகளையும் தங்களது கடினமான ஆராய்ச்சி மூலம் ஆவணப்படுத்திய 89 ஆய்வறிஞர்கள் மற்றும் அவர்களின் வழிகாட்டிகளும் இன்று (16.06.2024) பாரதியார் மண்டபத்தில் பாராட்டிச் சிறப்பிக்கப்பட்டனர்.

மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தனது உரையில், ஜம்புத்தீவு பிரகடனம், ஐரோப்பியர்களை பாரதத்திலிருந்து விரட்டியடிப்பதற்கான சமூகத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் விடுக்கப்பட்ட ஒரு தெளிவான அறைகூவலாக இருந்தது என்பதை விளக்கினார். சிவகங்கையின் சுதந்திரத்துக்காக மட்டுமின்றி, ஒட்டுமொத்த பாரதத்துக்கும் அது (ஜம்புத்தீவு) இருந்தது. தென்னிந்திய ஆய்வுகள் மையம் நடத்திய ஆய்வில், தமிழ்நாட்டைச் சேர்ந்த 5,000க்கும் அதிகமான இளைஞர்கள் இந்திய தேசிய ராணுவத்தில் சேர்ந்து நேதாஜி சுபாஷ் சத்ரபோஸுடன் இணைந்து போராடியது தெரியவந்துள்ளது என்று ஆளுநர் மேலும் கூறினார். அவர்களில் பலர் ஆங்கிலேயர்களுக்கு எதிரான போரில் தங்களின் இன்னுயிரை தியாகம் செய்தனர். இந்த தேசத்துக்காக உயிர் தியாகம் செய்த எண்ணற்ற சுதந்திர மாவீரர்கள் உள்ளனர். பாஞ்சாலங்குறிச்சி போருக்குப் பிறகு, கோட்டையுடன் நகரம் முழுவதும் தரைமட்டமாக்கப்பட்டதையும், நிலம் முழுவதையும் தரிசாக்குவதற்காக தரையில் உப்பு பரப்பப்பட்டதையும் ஆளுநர் குறிப்பிட்டார்.

நமது மாநிலத்தில் நமது தேசிய நாயகர்கள் அரசுகளால் கவனிக்கப்படாமல் பின்னர் சாதிய தலைவர்களாக தாழ்த்தப்பட்டிருப்பது துரதிருஷ்டவசமானது.

தேசிய சுதந்திர இயக்கத்தின் போது, 'ஒருமை உணர்வு' எவ்வாறு புத்துயிர் பெற்றது என்பதையும் அது அனைவரையும் ஒரே குடும்பமாக எவ்வாறு ஒன்றிணைத்தது என்பதையும் ஆளுநர் நினைவு கூர்ந்தார். 1905-ம் ஆண்டில், வங்காளம் வகுப்புவாத அடிப்படையில் பிளவுபட்டபோது, பாரதம் முழுவதும் மக்கள் கிளர்ச்சி செய்தனர். அப்போது, இங்கே தமிழ்நாட்டில் இருந்து வ.உ. சிதம்பரம் பிள்ளை கிளர்ந்தெழுந்தார். ஜாலியன் வாலாபாக் படுகொலை, இளம்

வயது காமராஜரை திகைக்க வைத்ததுடன் தேசிய சுதந்திர இயக்கத்தில் சேர அவரைத் தூண்டியது என்றும் ஆளுநர் குறிப்பிட்டார்.

நமது மக்களுக்கு மிக மோசமான அட்டூழியங்களை இழைத்தவர்களை நாம் தொடர்ந்து புகழ்ந்து பேசும் அளவுக்கு நாம் இன்னமும் காலனித்துவமாக இருக்கிறோம் என்று மாண்புமிகு ஆளுநர் வேதனை தெரிவித்தார். துரதிருஷ்டவசமாக, நமது தேசிய சுதந்திரத்துக்காக நமது முன்னோர்கள் செய்த தியாகங்களின் உண்மையான வரலாறு இன்னும் முழுமையாக பதிவு செய்யப்படவில்லை என்று கூறினார். இன்று நாம் அனுபவிக்கும் சுதந்திரத்துக்கு அதிகப்படியான விலையை நாம் கொடுத்திருப்பதை அறியாத வரை, சுதந்திரம் ஆங்கிலேயர்களிடம் இருந்து பரிசாக நமக்கு வந்தது என்று நம்ப வைக்கப்படும். இது நம் முன்னோர்களுக்கு இழைக்கப்படும் மிக மோசமான அவமரியாதையாக இருக்கும் என்று ஆளுநர் தெரிவித்தார்.

எனவே, ஓராண்டுக்கு முன்பு இந்த ஆராய்ச்சித் திட்டத்தை ஆளுநர் மாளிகை உருவாக்கியது. அதன்படி, அதிகம் அறியப்படாத சுதந்திர நாயகர்களை அடையாளம் கண்டு, அவர்கள் செய்த தியாகங்கள், அவர்களின் வாழ்க்கை, போராட்டங்கள் போன்றவை குறித்து ஆய்வு செய்து ஆவணப்படுத்தி அவர்களைக் கொண்டாட தீர்மானிக்கப்பட்டது. ஆரம்பத்தில் 100 சுதந்திர போராட்ட வீரர்களுடன் இது தொடங்கியது. ஆனால், இந்தப் பணி நீண்டு கொண்டே செல்வதால் மேலும், மேலும் அறியப்படாத சுதந்திர தியாகிகள் பட்டியலில் சேர்ந்து வருகின்றனர்.

18-ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 19-ம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் தமிழ்நாட்டில் நடந்த சுதந்திர போராட்டங்கள் குறித்த ஆராய்ச்சியில் ஈடுபட்டு அதன் அனுபவத்தை பகிர்ந்து கொண்ட வேறு சில நிபுணத்துவம் வாய்ந்த ஆராய்ச்சியாளர்களும் நிகழ்ச்சியில் கௌரவிக்கப்பட்டனர்.

"பாஞ்சாலங்குறிச்சி போர் 1798- 1801" என்ற நூலாசிரியர் திரு. பி. செந்தில் குமார், தமிழ்நாட்டு மக்கள் மீதான ஆங்கிலேயர்களின் அட்டூழியங்கள் மற்றும் அவற்றை நமது வீரர்கள் எவ்வளவு துணிச்சலுடன் எதிர்த்துப் போராடினார்கள் என்பதை விளக்கும் ஏராளமான ஆவணங்களை பிரிட்டிஷ் மற்றும் சென்னை வரலாற்று ஆவண பெட்டகத்தில் கண்டுபிடித்தது குறித்து விவரித்தார்.

முன்னதாக, மாண்புமிகு ஆளுநர் அவர்கள் மற்றும் நிகழ்ச்சியில் பங்கேற்ற முக்கிய விருந்தினர்களுடன் சேர்ந்து மருது சகோதரர்களுக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். இவ்விழாவில் வாழும் சுதந்திர போராட்ட தியாகிகள் சிலரை ஆளுநர் பாராட்டிச் சிறப்பித்தார். சென்னையில் உள்ள தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்ட பல்கலைக்கழகம் பதிப்பித்துள்ள 'இந்தியாவில் சுதந்திர இயக்கத்துக்கு தமிழ்நாடு வழக்கறிஞர்கள் வழங்கிய பங்களிப்பு' என்ற புத்தகத்தை ஆளுநர் வெளியிட்டார்.

இந்நிகழ்ச்சியில் திரு.ஆர். கிர்லோஷ் குமார், இ.ஆ.ப., ஆளுநரின் செயலாளர், பேராசிரியர் டாக்டர். என்.எஸ். சந்தோஷ்குமார், துணைவேந்தர் -

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், பல்வேறு மாநில பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்கள், திரு. பி. செந்தில் குமார், பாஞ்சாலங்குறிச்சி போர் புத்தக ஆசிரியர், திரு. பி. கோலப்பன், தி ஹிந்து மூத்த துணை ஆசிரியர், பேராசிரியர் டாக்டர் கே.எஸ். சர்வாணி, இயக்குநர் ஐக்யூஏசி & இயக்குநர், டிடிஇ, தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்ட பல்கலைக்கழகம், ஜம்புத்தீவு பிரகடன குழு உறுப்பினர்கள், சுதந்திர போராட்ட தியாகிகள், மகாகவி சுப்பிரமணிய பாரதியார் மற்றும் வ.உ. சிதம்பரனார் ஆகியோரின் வழித்தோன்றல்கள், மாநில பல்கலைக்கழகங்களின் முக்கிய பிரமுகர்கள், சிறப்பு அழைப்பாளர்கள், ஆராய்ச்சி வழிகாட்டிகள், அறிஞர்கள், பல்வேறு சுதந்திர போராட்ட தியாகிகள் சங்கங்களின் உறுப்பினர்கள், அதிகாரிகள் மற்றும் ஆளுநர் மாளிகை ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

…………………………………………………………………………………………

**ஆளுநர் மாளிகை, சென்னை-22** **வெளியீடு:-**

**நாள்: 16.06.2024** **மக்கள் தொடர்பு அலுவலகம்**